அதற்கு வேண்டிய துணைப்பொருள்கள் வெளி நாடுகளிலிருந்து கிடைக்க வேண்டியது கிடைக்காததால், துணைப் பொருள்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதை உற்பத்தி செய்கிற வர்கள் இந்த அரசாங்கத்தின் உதவியைக் கோரினால், இயன்ற அளவில் ஆதரவெல்லாம் அதற்கு அளிக்கப்படும்.

Dhrangadra Chemical Works—State aid to

*1789 Q.—SRI. V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திருநெல்வேலி ஜில்லாவில் நடைபெறும் தரங்கத்ரா ரசாயன தொழிற்சாலைக்கு ராஜ்ய சர்க்கார்களின் உதவி ஏதாவது கொடுக்கப்பட்டுள்ளதா ? அப்படியானால் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government of Madras have taken shares to the value of Rs. 10 lakhs in the Dhrangdhra Chemical Works, Limited, which has set up a caustic soda factory in Tirunelveli district.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார் இந்தத் தொழிற் சாலையில் எல்லாம் வட இந்தியர்களைக் கொண்டே நடத்தப்படுகிறது, தென்னிந்தியர்களே இல்லை என்ற அதிருப்தி இருக்கிறது. அங்கு சென்ற காங்கிரஸ் எம். எல். ஏக்கள் எல்லோரிடத்திலும் சொன்னார்கள். அது அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்கு ஒன்று தெரியும். தென்னிந்தியர்கள் ஒருவர்கூட இல்லை என்பது உண்மையில்லை என்று.

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முதலாளி நடத்தும் இந்தத் தொழிற்சாலைக்கு 10 லட்ச ரூபாய் வரை மூலதனம் சர்க்கார் கொடுக்கக் காரணம் என்ன, எந்த அடிப்படையில் உதவி செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது ஒரு முக்கியமான தொழில். தூத்துக்குடி பக்கத்தில் மூலப் பொருள் கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தி இதை உற்பத்தி செய்ய வேண்டும். அப்பொழுது நான் தொழில் இலாகா பொறுப்பு வகித்து வந்தேன். தமிழ் நாடு பூராவிலும் தொழில் அதிபர்களுக்குக் கடிதம் எழுதி, இந்தத் தொழிலை யாராவது எடுத்து நடத்துவார்களா என்று கேட்டேன். எல்லோரும் எங்களால் முடியாது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஒருவர் வருகிறார் என்றால், அதற்கு பூரா மூலதனமும் போடமுடியவில்லை. இதை விஸ்தரிப்பதால், தமிழ் நாட்டின் பொருளாதார நிலை உயரும். இம்மாதிரி இருக்கும் தொழிலில் முதல் போடுவது என்பது அரசாங்கத்தின் கொள்கை ; நோக்கமும் ஆகும்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், உற்பத்தி தொடங்கி ஒரு வருஷம் ஆகிவிட்டதே. அது லாபகரமாக நடக்கிறதா, சர்க்கார் பங்குத் தொகைக்கு லாபம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றித் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Jaggery—Export of

*1790 Q. SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலிருந்து வெல்லம் ஏற்றுமதியை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது உண்மையா ?